# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590


## முன்னிலை

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 19002/விசாரணை/E/2023**

திரு.மு.குமார் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/வட்ட துணை ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஸ்ரீரங்கம், திருச்சி மாவட்டம்-620 005. .. பொது அதிகார அமைப்பு

******

## இறுதி ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 27.01.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், ஸ்ரீரங்கம் வட்டத் துணை ஆய்வாளர்/பொதுத் தகவல் அலுவலர் திரு.வெங்கடேஸ்வரன் 23.03.2026 அன்று நேரில் ஆஜராகி, ஆணையத்தின் 27.01.2026 தேதியிட்ட உத்தரவு பத்தி 4(1) தொடர்பாக, மேல்முறையீட்டாளருக்கு அவர் கோரிய தகவல்கள் நேரில் வழங்கப்பட்டதன் அடிப்படையில், அவர் வழக்கினை முடித்து வைக்க தெரிவித்த மனநிறைவு கடிதம் அளித்துள்ளதாக தெரிவித்து, அதன் நகலை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார். மேல்முறையீட்டாளர் 18.03.2026 தேதியிட்ட கடிதத்தில், தான் கோரிய தகவல்களை 18.03.2026 அன்று வட்டத் துணை ஆய்வாளரிடமிருந்து நேரில் மனு நிறைவுடன் பெற்றுக் கொண்டதாகவும், வழக்கினை முடித்து வைக்க ஆவண செய்யுமாறு கேட்டுக் கொள்வதாக தெரிவித்துள்ளார்.

2. இவ்வாணையத்தின் 27.01.2026 தேதியிட்ட உத்தரவு பத்தி 4(2) தொடர்பாக, ஸ்ரீரங்கம் வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலரின் 13.03.2026 தேதியிட்ட அறிக்கையை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார்.

3. மேல்முறையீட்டு அலுவலர் 13.03.2026 தேதியிட்ட அறிக்கையில், பொதுத் தகவல் அலுவலரின் 13.03.2026 தேதியிட்ட விளக்கத்தை இணைத்து சமர்ப்பித்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் தனது விளக்கத்தில், 27.01.2026 அன்று நடைபெற்ற விசாரணைக்கான அழைப்பாணை தனக்கு 28.01.20216 அன்று தான் கிடைக்கப் பெற்றதாகவும், ஆகவே விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை என்றும் தெரிவித்துள்ளதை ஏற்று, அவர் மீதான நடவடிக்கையை இவ்வாணையம் இத்துடன் கைவிடுகிறது.

4. இவ்வாணையத்தின் 27.01.2026 தேதியிட்ட உத்தரவுகள் நிறைவேற்றப்பட்டுள்ளதால், இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள் : 06.04.2026**

**ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 19002/விசாரணை/E/2023</u>**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்,
வட்ட துணை ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஸ்ரீரங்கம், திருச்சி மாவட்டம்-620 005.

திரு.மு.குமார்
ப.எண்.9, புதிய எண்.47, கீழத் தெரு,
மேலூர் ஸ்ரீரங்கம்,
திருச்சி மாவட்டம்-620 006.

Copy to: File

RJ/PS 7.4